# 29-04-2024 செய்தி

## மின்னணுப் பொருள்கள் உற்பத்தி: தமிழ்நாட்டின் சாதனைகள் தொடரட்டும்

- மின்னணுப் பொருள்கள் உற்பத்தியில் இந்திய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து இரண்டாம் ஆண்டாக முதலிடம் வகிப்பதாக மத்திய அரசு வெளியிட்டிருக்கும் தகவல் மகிழ்ச்சியளிக்கிறது.
- இரண்டாம் இடத்தில் கர்நாடகமும், மூன்றாம் இடத்தில் உத்திரப் பிரதேசமும் உள்ளன. 2021-22 நிதியாண்டு வரை இம்மாநிலங்களுக்கு அடுத்த இடத்திலேயே இருந்துவந்த தமிழ்நாடு, 2022-23 நிதியாண்டிலிருந்து முன்னணியில் இருந்துவருகிறது.
- ஃபாக்ஸ்கான், டாடா எலெக்ட்ரானிக்ஸ், சல்காம்ப், பெகட்ரான் போன்ற பதினைந்துக்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்களும் பல சிறு நிறுவனங்களும் தமிழ்நாட்டில் மின்னணுப் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபட்டுவருகின்றன.
- தமிழ்நாட்டு மின்னணுப் பொருள்கள் மற்றும் வன்பொருள் உற்பத்திக் கொள்கை 2020இல் வெளியிடப்பட்டது.
- 2025க்குள் 100 கோடி அமெரிக்க டாலர் உற்பத்தி (இந்திய அளவில் 25%) என்கிற இலக்கை இக்கொள்கை கொண்டிருந்தது.
- நிறுவனங்களின் முதலீட்டுத் தொகை, வேலை பெறுவோர் எண்ணிக்கை ஆகியவற்றைப் பொறுத்துத் தொழில் தொடங்குவோருக்கு ஊக்கத்தொகை வழங்கவும் அக்கொள்கையில் இடம் உள்ளது.
- குறைவான வாடகையில் நிலம், குறைந்த விலையில் மின்சாரம், குறிப்பிட்ட காலத்துக்கு வரிச்சலுகை போன்ற வசதிகள் நிறுவனங்களுக்கு அரசு வழங்குகிறது.
- நடைமுறை தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பை அரசே ஏற்றுக்கொள்வதும் உண்டு.
- மாநிலத்தின் கருவூலத்தை வலுப்படுத்துவதுடன், வேலைவாய்ப்புகளை உருவாக்கலாம் இந்த அணுகுமுறை மிக அவசியமானது.

## பரிசோதனைக் கூடமா இந்தியா?

- சில தினங்களுக்கு முன்பாக வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் போர்ன்விட்டா உட்பட ஆரோக்கியபானங்கள் என இதுவரை அழைக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு வந்த பானங்களை இனிமேல் அப்படிக் குறப்பிடக்கூடாது என்று ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- மேலும், ஹெல்த் டிரிங்க்ஸ், எனர்ஜி டிரிங்க்ஸ் என்ற பிரிவுகளை தங்களது இணையதளங்களில் இருந்து அகற்றுமாறு அனைத்து இ-காமர்ஸ் நிறுவனங்களையும் கேட்டுக் கொண்டது.
- போர்ன்விட்டாவில் அதிகஅளவு சர்க்கரை இருப்பதாகவும் இதனால், குழந்தைகளின் உடல்நலத்துக்கு தீங்கு ஏற்படுவதாகவும் கூறப்பட்டு வந்தநிலையில், மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.
- நெஸ்லே இண்டியா தயாரித்து சந்தைப்படுத்தி வரும் செரிலாக் என்கிற குழந்தைகளுக்கான உணவுப் பொருளாகும்.
- இதில் ஒரு பரிமாறலுக்கான அளவில் 2.2 கிராம் சர்க்கரை கலந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.
- ஆனால் மற்ற வளர்ந்த நாடுகளில் விற்பனையாகி வரும் இந்தப் பொருளில் சர்க்கரையின் அளவு மிகவும் குறைவு என்றும் குறைந்த வருமானம், நடுத்தர வருமானம் கொண்ட வளர்ந்து வரும் நாடுகளில் விற்பனையாகும் இப்பொருளில் சர்க்கரை அளவு அதிகம் எனவும் தற்போது சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- இது தொடர்பாக விசாரனை நடத்த இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்துக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
- இதனிடையே, ஹிந்துஸ்தான் யூனிலிவர் நிறுவனம், ஹார்லிக்ஸ், பூஸ்ட் போன்ற தனது பிராண்டுகளில் இருந்து, ஹெல்த் ட்ரிங்க்ஸ் என்ற வார்த்தையை நீக்கியுள்ளது.
- இவற்றுக்கு ஃபங்ஷனல் நியூட்ரிஷனல் ட்ரிங்க்ஸ் (Functional Nutritional Drinks) எனப் பெயரிட்டுள்ளது.